# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

# 2017 -2018

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 10

சுட்டெண்:.............................................................. நேரம்: 180 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. வன்னி மண்ணின் மேன்மையைப் பறைசாற்றி நிற்பது

அ) வவுனியா ☐ ஆ) மன்னார் ☐

இ) யாழ்ப்பாணம் ☐ ஈ) மட்டக்களப்பு ☐

2. மலைவளம் காண மனைவியுடன் புறப்பட்ட மன்னன்

அ) சேரலாதன் ☐ ஆ) கனகன் ☐

இ) சேரன்செங்குட்டுவன் ☐ ஈ) நெடுஞ்செழியன் ☐

3. பொருட்களை எண்ணும் இடங்களில் வருவது

அ) அரைப்புள்ளி ☐ ஆ) காற்புள்ளி ☐

இ) முக்காற்புள்ளி ☐ ஈ) முற்றுப்புள்ளி ☐

4. மலர்களிலே தேனருந்தும் வண்டினங்கள்

அ) கத்துகின்றன ☐ ஆ) கூவுகின்றன ☐

இ) முரல்கின்றன ☐ ஈ) கரைகின்றன ☐

5. குமரிக்கண்டம் கடற்கோளால் உடைந்து சிதறிய பொழுது பிரிந்து போன பெருநிலப்பரப்புகளில் ஒன்று

அ) அமெரிக்கா ☐ ஆ) ஐரோப்பா ☐

இ) அவுத்திரேலியா ☐ ஈ) கனடா ☐

6. பின்வருவனவற்றுள் வன்றொடர்க் குற்றியலுகரம்

அ) காது ☐ ஆ) பத்து ☐

இ) செய்து ☐ ஈ) முரசு ☐

7. மருத நிலத்தில் ஆடலுக்கான முழவுகளாக முழங்குபவை

அ) முகில்கள் ☐ ஆ) வண்டுகள் ☐

இ) மயில்கள் ☐ ஈ) குவளைகள் ☐

8. பஃறுளியாற்றுக்கும் குமரியாற்றுக்கும் இடையே __________ நாடுகள் இருந்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன.

அ) 39 ☐ ஆ) 29 ☐

இ) 59 ☐ ஈ) 49 ☐

9. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள்

அ) 20 ☐ ஆ) 100 ☐

இ) 147 ☐ ஈ) 6 ☐

10. மதுரையில் கழகம் அமைத்துத் தமிழை வளர்த்த பெருமைக்குரியவர்

அ) சேரர் ☐ ஆ) சோழர் ☐

இ) பாண்டியர் ☐ ஈ) களப்பிரர் ☐

11. மண் என்பது

அ) காரணப்பெயர் ☐ ஆ) காரணஇடுகுறிப்பெயர் ☐

இ) இடுகுறிப்பெயர் ☐ ஈ) குணப்பெயர் ☐

12. சால, உறு, தவ போன்றன

அ) வினைச்சொற்கள் ☐ ஆ) பெயர்ச்சொற்கள் ☐

இ) உரிச்சொற்கள் ☐ ஈ) இடைச்சொற்கள் ☐

13. அகத்திணை நூல்களில் ஒன்று

அ) குறுந்தொகை ☐ ஆ) புறநானூறு ☐

இ) பரிபாடல் ☐ ஈ) பதிற்றுப்பத்து ☐

14. இன்றைய இந்துமாவாரி, அன்று ______________ என அழைக்கப்பட்டது.

அ) ஆபிரிக்கக்கண்டம் ☐ ஆ) ஐரோப்பாக்கண்டம் ☐

இ) ஆசியாக்கண்டம் ☐ ஈ) குமரிக்கண்டம் ☐

15. காலப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) காலை ☐ ஆ) கருமை ☐

இ) கண் ☐ ஈ) மரம் ☐

16. மங்கிக் கிடக்குந் தமிழை - மீண்டும்
மாளிகை ஏற்றி வணங்கியே சாவேன் ! எனக் கூறியவர்

அ) கண்ணதாசன் ☐ ஆ) இளங்கோவடிகள் ☐

இ) காசிஆனந்தன் ☐ ஈ) பாவேந்தர் ☐

17. குமரிமலையிலிருந்து பாய்ந்தோடிய ஆறுகளில் ஒன்று

அ) நைல் ☐ ஆ) பஃறுளி ☐

இ) சிந்து ☐ ஈ) காவேரி ☐

18. அறந்தவறியதால் வளைந்த செங்கோலைத் தன் உயிரைக் கொடுத்து நிமிர்த்திய மன்னன்

அ) சேரன் ☐ ஆ) சோழன் ☐
இ) பாண்டியன் ☐ ஈ) பல்லவன் ☐

19. அயில் என்பது

அ) வேல் ☐ ஆ) மீன் ☐
இ) அம்பு ☐ ஈ) வில் ☐

20. கற்பின் தெய்வம் கண்ணகிக்குப் படிமம் எடுத்து வழிபட வேண்டும் எனக் கூறியவர்

அ) இளங்கோ ☐ ஆ) மாதவி ☐
இ) வேண்மாள் ☐ ஈ) பாண்டிமாதேவி ☐

21. நல்லன் என்பது

அ) வினையெச்சம் ☐ ஆ) தெரிநிலைவினை ☐
இ) குறிப்புவினை ☐ ஈ) பெயரெச்சம் ☐

22. மலையும் மலைசார்ந்த இடமும்

அ) குறிஞ்சி ☐ ஆ) முல்லை ☐
இ) மருதம் ☐ ஈ) நெய்தல் ☐

23. நாவலந்தீவின் இன்றைய பெயர்

அ) ஈரான் ☐ ஆ) இந்தியா ☐
இ) மொசப்பத்தேமியா ☐ ஈ) இலெமூரியா ☐

24. வினையாலணையும் பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) படிப்பவன் ☐ ஆ) படித்தான் ☐
இ) படித்து ☐ ஈ) படித்த ☐

25. மரமும் பறவையும்

அ) கருப்பொருள் ☐ ஆ) அகப்பொருள் ☐

இ) உரிப்பொருள் ☐ ஈ) முதற்பொருள் ☐

26. செவ்வழிப் பண் இசைப்பது

அ) வைகறையில் ☐ ஆ) மாலையில் ☐

இ) இரவில் ☐ ஈ) நண்பகலில் ☐

27. திருக்குறள் திருவள்ளுவரால் எழுதப்பட்டது. இதில் எழுதப்பட்டது என்பது

அ) செய்வினை ☐ ஆ) செயப்பாட்டுவினை ☐

இ) குறைவினை ☐ ஈ) பிறவினை ☐

28. அச்சமின்றி ஆடிப்பாடி இன்புற ____________ வேண்டுமெனக் கண்ணதாசன் கூறுகின்றார்.

அ) உழைப்பு ☐ ஆ) முயற்சி ☐

இ) விடுதலை ☐ ஈ) பணம் ☐

29. செயப்படுபொருள் குன்றிய வினைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) நட ☐ ஆ) வெட்டு ☐

இ) சாப்பிடு ☐ ஈ) படி ☐

30. மருதநில அரங்கிலே நாடக மேடையின் எழினிகளாகத் தோன்றுபவை

அ) வண்டுகள் ☐ ஆ) நீரலைகள் ☐

இ) மயில்கள் ☐ ஈ) செடிகள் ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

பழைய கற்கால மாந்தன் உணவைத் தேடி இடம்பெயர்ந்து சென்றான். பின்னர் வேட்டையாடி உண்டான். காலஞ் செல்லச் செல்ல தன் உணவைத் தானே உற்பத்தி செய்து கொள்ள முயன்றான். ஆடு, மாடு, கோழி போன்றவற்றை அன்பு காட்டி வளர்த்தான். மாந்தன் முதலில் பழக்கிய விலங்கு நாய். இது வேட்டையின்போது உடன் சென்று உதவியது. ஆடு, மாடுகளை மேய்த்து அவற்றின் பால், இறைச்சி போன்றவற்றை உணவாகக் கொண்டான். மாந்த நாகரிக வளர்ச்சியின் முதற்படிநிலையே புதிய கற்காலம். புதிய கற்கால மாந்தன் செதுக்கப்பட்ட கூர்மையான கற்கருவிகளைப் பயன்படுத்தினான். அதன் படிநிலை வளர்ச்சியே உணவு உற்பத்தியாகும். இக்காலத்தில்தான் சக்கரமும் உருவாக்கப்பட்டது. இதன் விளைவாகப் பொருட்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எளிதாக எடுத்துச் சென்றான். மேலும், சக்கரத்தைப் பயன்படுத்தி மட்பாண்டங்கள் செய்தான். கற்கருவிகளுக்கு எலும்பு, மரம் போன்றவற்றினால் உருவாக்கப்பட்ட கைப்பிடிகளைப் பொருத்தினான். இவ்வாறே மாழையின் பயன் அறிமுகமாகியது. முதன் முதலில் பயன்படுத்திய மாழை செம்பு. எனவே, அக்காலம் செம்புக் காலம் என்று அழைக்கப்பட்டது. ( **மாழை - உலோகம்** )

1. மாந்தன் கற்கருவிகளுக்கு எவற்றால் உருவாக்கப்பட்ட கைப்பிடிகளைப் பொருத்தினான்?

______________________________________________

______________________________________________

2. எவற்றை அன்பு காட்டி வளர்த்தான்?

______________________________________________

______________________________________________

3. மாந்த நாகரிக வளர்ச்சியின் முதற் படிநிலை வளர்ச்சி எது?

______________________________________________

______________________________________________

4. முதன் முதலில் பயன்படுத்திய மாழை எது?

______________________________________________

______________________________________________

5. எக்காலத்தில் சக்கரம் உருவாக்கப்பட்டது?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. "இளையோர் சூடார் வளையோர் கொய்யார்" என்ற பாடல் யாரால் எதைப் பார்த்துக் கூறப்பட்டது?

___

___

2. கழகக்கால ஆடவர் எதனைப் பெரும் பேறாகக் கருதினர்?

___

___

3. குமரிக்கண்டத்தின் எஞ்சிய பகுதிகளாக இன்றுள்ள தமிழ்நாடுகள் எவை?

___

___

4. சேரன் செங்குட்டுவனது வடதிசைச் செலவு பற்றி எங்கே பறை அறையப்பட்டது?

___

___

5. கோவலன் கண்ணகி கதையைச் சேரன் செங்குட்டுவனுக்குக் கூறியவர் யார்?

___

___

6. இயற்கைத் தாய் முடியரசனை எவ்வாறு தாலாட்டுகிறாள்?

___

___

7. மேற்குலக ஆய்வாளர்களும் ஏற்கும்படி தமிழே உலகின் முதன்மொழி, உலகின் முதல் மாந்தவினம் தமிழர் என நிறுவிய அறிஞர் யார்?

___

___

புள்ளிகள் 10

**4. எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

கடமை செய்வோம் கலங்காமலே

உரிமை கேட்போம் தயங்காமலே

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. பின்வருவனவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

   அ. தன்வினை

   ____________________________________

   ஆ. பிறவினை

   ____________________________________

2. சொற்பொருள் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| தண்மை | __________ | பரிதி | __________ |
| விரை | __________ | கணிகன் | __________ |
| பாணன் | __________ | விறலியர் | __________ |

3. அ. மெய்யெழுத்துகள் எத்தனை வகைப்படும்?

______________________________

ஆ. பின்வருவனவற்றைத் தருக .

மெல்லின மெய்யெழுத்துகள் :- ______________________

இடையின மெய்யெழுத்துகள் :- ______________________

4. பின்வருவனவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

தனிமொழி :- ______________________

தொடர்மொழி :- ______________________

பொதுமொழி :- ______________________

5. எடுத்துக்காட்டுகள் தருக.

செப்புச் சொல்லியம் ( வாக்கியம் )

______________________________

ஏவற் சொல்லியம்

______________________________

புள்ளிகள் 15

6) **பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே போரில் காயமுற்றோரைக் காப்பாற்றுவதற்காக, கென்றி டுணன்ற் என்பவரால் செஞ்சிலுவைச் சங்கம் சுவிற்சலாந்தில் தொடங்கப்பட்டது. இது ஓர் உதவி நிறுவகம். இந்நிறுவகம் இன்று உலகமெங்கும் இயங்கி வருகிறது. பல நாடுகளில் துன்புற்ற மக்களுக்கு உதவி செய்கிறது; கொடிய நோய்களுக்கு உள்ளான ஏழை மக்களுக்கு மருத்துவம் அளிக்கிறது; வறுமையில் வாடும் நாடுகளில் உள்ள மக்களுக்கு உணவளித்துக் காக்கின்றது; இயற்கை அழிவினாலும் போரினாலும் துன்புறும் மக்களுக்கு விரைந்து உதவுகிறது. செஞ்சிலுவைச் சங்கம் தன் அடையாளமாகச் சிலுவையைக் கொண்டுள்ளது. இந்நிறுவகத்தால் மக்கள் பல நன்மைகளை அடைகின்றனர்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

✸ கடல்கொண்ட தமிழகம்.

✸ உம்மால் மறக்க முடியாத நிகழ்வு.

✸ வறுமையின் கொடுமை

- வறுமை என்றால் என்ன?
- வறுமையின் கரணியம்
- இளமையில் வறுமையும் அதன் கொடுமையும்
- வறுமையைப் போக்கும் வழிவகைகள்

புள்ளிகள் 20